முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

**அ.வ.எண். 183/2024**

2025-ம் வருடம் ஜனவரி திங்கள் 10-ம் நாளன்று வாதி சாட்சியாக வா.சா.1-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : சக்திவேல் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் இவ்வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

05.05.2023 தேதியிட்டு, ரூ.10 இலட்சத்துக்கு பிரதிவாதி என் பெயருக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.1

02.07.2024 தேதியிட்டு, நான் என் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் வா.சா.ஆ.2

அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3

அறிவிப்பை எட்டிக்கண்ணன் என்பவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4

அறிவிப்பை பிரதிவாதியின் மனைவி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.5

என் அப்பா இறப்புச்சான்றிதழ் வா.சா.ஆ.6

05.08.2015 தேதியிட்டு, என் அப்பா எழுதி வைத்த உயில் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7

என் அம்மா பெயரில் உள்ள கணிணி பட்டா பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8

வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி
கரூர்